# ஜா எல பிரதேச சபை
# கம்பஹா மாவட்டம்

## 1 நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 மார்ச் 28 ஆம் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2012 மார்ச் 16 ஆம் திகதியும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை 2014 சனவரி 28 ஆம் திகதி சபைத் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்ட எனது அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ள கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஜா எல பிரதேச சபையின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது என்னால் அபிப்பிராயமொன்றைத் தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) காணி, கட்டிடங்களின் பெறுமதி ரூபா 10,099,000 தொகை மூலதனமாக்கப்படுகையில் ரூபா 100,000 தொகை குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது நிர்மாணிக்கப்பட்ட ஏழு கட்டிடங்களின் பெறுமதி மூலதனமாக்கப்படுகையில் இதல் செய்யப்பட்ட வேலைப் பெறுமதி கருத்திற்கொள்ளப்படாது மதிப்பீட்டுப் பெறுமதி கருத்திற்கொள்ளப்பட்டிருந்தமையால் காணி, கட்டிடங்களின் பெறுமதி

ரூபா 438,043 தொகை அதிகரித்துக் கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் போது 304 - 4 செலவினத் தலைப்பின் மூலம் செலவினம் ஏற்கப்பட்ட இரண்டு நிர்மாணிப்புச் செயற்திட்டங்களுக்காக கடன்கொடுத்தோர் ஒதுக்கங்கள் மேற்கொள்ளப்பட்டமையால் கடன்கொடுத்தோர் மீதி ரூபா 735,461 தொகை கூடுதலாகக் கணக்கில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) 2012 யூன் 08 ஆம் திகதி வரைபட இல. 4611/L ஆம் இலக்க காணிக் கூறுத் திட்டம் அங்கீகரிக்கப்படுகையில் பொது வசதிகளுக்காக ஒதுக்கப்பட்டிருந்த 29.38 பேர்ச் காணிக் கூறு கணக்காய்வுத் தினமாகிய 2013 ஆகஸ்ட் 27 ஆம் திகதி வரையிலும் உறுதியின் மூலம் கையேற்கப்பட்டிருக்கவில்லை. இக் காணி நிதிக்கூற்றுக்களில் காணி, கட்டிடத்தின் கீழ் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டிற்காகப் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 1,097,056 தொகையான நிலையான வைப்பு வட்டி வருமானத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 2012 ஆம் ஆண்டின் போது கிடைக்கப்பெற்ற ரூபா 50,000 தொகையான நீதிமன்ற தண்டப்பணம் ஆண்டிற்கான வருமானத்திற்கு எடுத்துக்கொள்ளப்படாது வைப்பாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 9,819,876 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்கள் கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தன.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 119,082,878 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 51,052,758 ஆக இருந்தது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

(அ) வங்கிக் கணக்கிணக்கம் தயாரிக்கப்படுகையில் காசேட்டு மீதியுடன் இணக்கம் செய்யப்படுவதற்காக எடுக்கப்பட்ட மீதிகளில் வேறுபாடு அவதானிக்கப்பட்டன.

(ஆ) திசெம்பர் 31 இல் உள்ளவாறு மதிப்பிழந்த காசோலைக் கணக்கில் ரூபா 318,720 தொகையான மீதி காணப்பட்டதுடன் தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3 தொங்கல் கணக்குகள்

பல வருட காலமாக முன்கொண்டுவரப்பட்ட தொங்கல் கணக்குகளில் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செலவு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 236,425 ஆகக் காணப்பட்டது.

### 2.4 வருமான நிர்வாகம்

#### 2.4.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரால் மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| (i) | வீதவரியும் வரியும் | 32,758 | 33,677 | 33,757 |
| (ii) | வாடகை | 4,218 | 4,422 | 10,231 |
| (iii) | ஏனைய வருமானம் | 9,133 | 9,343 | 2,783 |

மேற்குறிப்பிடப்பட்ட விடயங்களின் படி வருமான அறவீட்டின் முன்னேற்றம் 50% மீதியைக் கொண்டிருந்தது.

### 2.4.2 வீதவரி

(அ) 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாகக் காணப்பட்ட வீதவரி மீதி ரூபா 34,969,180 ஆகக் காணப்பட்டதுடன் இதில் ரூபா 10,000 இற்கு மேலான நிலுவை மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,756,045 ஆகக் காணப்பட்டது.

(ஆ) உள்ளூராட்சி ஆணையாளர் நாயகத்தின் 1980 திசெம்பர் 31 ஆம் திகதிய 80/46 ஆம் இலக்க சுற்றறிக்கையின் படி ஆகக் குறைந்தது 5 ஆண்டுகளுக்கு ஒரு முறையாவது கடை வாடகை மற்றும் வீதவரி மதிப்பிடப்பட வேண்டிய போதிலும் 2001 ஆம் ஆண்டின் பின்னர் மதிப்பிடப்பட்டிருக்கவில்லை.

### 2.4.3 வாடகை

(அ) 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு றாகம உப அலுவலகத்திற்கு உரித்தான இறைச்சிக் கடைகளிலிருந்து பெறவேண்டிய வருமானம் ரூபா 3,460,942 ஆகக் காணப்பட்டதுடன் இதில் 5 முதல் 15 வரை பழைமை வாய்ந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,662,500 ஆகக் காணப்பட்டது.

(ஆ) சபையிடம் இல்லாத இறைச்சிக் கடைகளிலிருந்து பெறவேண்டிய வருமானம் ரூபா 1,533,273 ஆகக் காணப்பட்டதுடன் இதில் 5 முதல்

20 ஆண்டுகள் வரையான காலம் கடந்திருந்த மீதியும் இதில் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் அம் மீதியை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.5 விளைவற்றதும் குறைவான பயன்பாடுடையதுமான வளங்கள்**

பிரதேச சபைக்கு உரித்தான 34 வாகனங்களைக் கொண்ட ஓர் அணி காணப்பட்டதுடன் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) இராணுவக் கடமைகளுக்காக வழங்கப்பட்ட ஓர் டபிள் கப் வண்டி 2009 பெப்ரவரி 27 ஆம் திகதி சபையிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. இயந்திரக் கோளாறென நிறுத்தி வைக்கப்பட்டு 3 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் பழுதுபார்க்கப்படுவதற்கோ அல்லது ஏலவிற்பனை செய்யப்படுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2 வாகனங்களும் 3 இயந்திரங்களும் நீண்டகாலமாக செயலிழந்த நிலையில் காணப்பட்டதுடன் பழுதுபார்க்கப்படுவதற்கோ அல்லது ஏலவிற்பனை செய்யப்படுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.6 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்**

ஓர் வான் 2011 திசெம்பர் 18 ஆம் திகதி முதல் 2012 சனவரி 31 ஆம் திகதி வரையான காலப்பகுதியின் போது பயணித்த இடம், தூரம், மைல் கணக்கு, பயணம் செய்த உத்தியோகத்தர்கள் மற்றும் வாகனம் பயன்படுத்திய உத்தியோகத்தரின் கையொப்பம் ஆகிய எவ்வித தகவல்களும் நாளாந்த ஓட்ட அட்டவணையில் உள்ளடக்கப்பட்டிராத போதிலும் அக் காலப்பகுதியின் போது 637 லீற்றர் எரிபொருள் பெறப்பட்டதாக நாளாந்த ஓட்ட அட்டவணைகளில் பதியப்பட்டிருந்ததை கணக்காய்வின் போது ஏற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

**2.7 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்**

**(அ) பாதுகாப்புச் சேவை**

நிறுவகத்தில் 13 பாதுகாப்புச் சேவைப் பதவியணியினர் இருக்கையில் இதற்கு மேலதிகமாக 10 பேரை பாதுகாப்புச் சேவைக்காக வெளியிலிருந்து பெற்றுக்கொண்டு இதற்காக ரூபா 1,933,970 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

**(ஆ) வாகனம் வாடகைக்குப் பெற்றுக்கொள்ளல்**

(i) சபையிடம் 18 உழவு இயந்திரங்களும் 2 லொறிகளும் இருக்கையில் மின்சாரப் பகுதியின் பராமரிப்பு நடவடிக்கைகள் மற்றும் குப்பை கூளங்களை அகற்றுவதற்காக உழவு இயந்திரம் ஒன்றும் லொறி ஒன்றும் வாடகைக்குப் பெறப்பட்டிருந்ததுடன் இதற்காக 2012 ஆம் ஆண்டிற்காக முறையே ரூபா 748,000 தொகையும் ரூபா 734,450 தொகையும் செலுத்தப்பட்டிருந்தது.

(ii) வாடகை வாகனம் ஒன்று பெறப்படுகையில், வாடகை உரித்தாளரிடம் நாளாந்த உரிமை இருப்பதோடு, வண்டிக்காக பூரண காப்புறுதி உரிமை பெற்றிருக்க வேண்டிய போதிலும் வாடகைக்காகப் பெற்றுக்கொள்ளப்பட்ட வாகனம் தொடர்பாக அவ் விடயங்கள் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை.

(iii) 2012/2013 ஆம் ஆண்டுகளின் போது 02 உழவு இயந்திரங்கள் சபைக்குப் புதிதாகப் பெறப்பட்டிருந்த போதிலும் 2011 ஒக்டோபர் 01 ஆம் திகதி முதல் ஒரு வருட காலத்திற்கு வாடகைக்குப் பெற்றுக்கொள்ளப்பட்ட ஓர் உழவு இயந்திரம் 2013 செப்தெம்பர் 30 ஆம் திகதி வரையிலும் வாடகையில் பெறப்பட்டிருந்தது.

(iv) சபையிடமிருந்த PC - 60 எக்ஸ்கவேட்டரின் டிரவல்ஸ் இயந்திரம் செயலிழந்த காரணத்தால் சேவையில் ஈடுபடுத்தப்பட முடியாமையால் வாடகை அடிப்படையில் ஓர்

எக்ஸ்கவேட்டர் பெறப்பட்டு இதற்காக ரூபா 619,750 தொகை செலுத்தப்பட்டிருந்தது. PC - 60 இற்கு உரித்தான கோவையும் நாளாந்த ஓட்ட அட்டவணைப் பரிசோதனையின் போது இவ் எக்ஸ்கவேட்டர் பழுதுபார்க்கப்படுவதற்கு உள்ளதாகவோ அல்லது பழுதுபார்க்கப்பட்டமையோ கணக்காய்வில் அவதானிக்கப்பட்டிருக்கவில்லை.

(v) சபையிடம் 3 எக்ஸ்கவேட்டர்கள் காணப்பட்டதுடன் இவற்றில் 2 செயலிழந்த நிலையில் காணப்பட்டன. சபைக்குரிய இவ் வாகனங்களை பழுதுபார்த்து பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படுவதற்கான இயலுமை தொடர்பாக ஆராய்ந்தறிந்து ஆக்கபூர்வமாகப் பயன்படுத்தப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.8 நிறுவகத்திற்கு எதிராக அல்லது நிறுவகத்தால் ஆரம்பிக்கப்பட்ட சட்ட நடவடிக்கைகள்

(i) 04 வெளி நிறுவகங்களால் ரூபா 3,495,169 கூட்டுத்தொகையான நட்டஈடு கோரி நிறுவகத்திற்கு எதிராக நீதிமன்றங்களில் நான்கு வழக்குகள் தொடரப்பட்டிருந்தன.

(ii) நிறுவகத்தால் நிர்மாணிப்பு ஒப்பந்தம் ஒன்று தொடர்பாக வெளி நிறுவகம் ஒன்றிற்கு எதிராக ரூபா 43 இலட்சம் நட்டஈடு கோரி தேசிய சமத்துவ சபையில் ஓர் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இதற்காக குறித்த நட்டஈட்டுத் தொகை சபைக்கு வழங்கப்படுவதற்கான தீர்ப்பு வழங்கப்பட்டிருந்த போதிலும் மேன்முறையீடு செய்யப்பட்டிருந்தது.

## 2.9 திண்மக் கழிவு முகாமைத்துவம்

சபை அதிகார எல்லைக்குட்பட்ட பகுதியில் நாளொன்றிற்கு சேரும் குப்பையின் அளவு 42 தொன்களானதுடன் இதில் நாளொன்றிற்கு சேர்க்கப்படும் குப்பையின் அளவு 26 தொன்களாகும்.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபை அதிகார எல்லைக்குட்பட்ட பகுதியில் குப்பை சேகரிக்கப்படுகையில் அவை உக்கலடையும்/ உக்காதவையாக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சேதனப் பசளைச் செயற்திட்டத்திற்காகப் பயன்படுத்தப்படும் உக்கலடையும் குப்பைகளின் அளவு நாளொன்றிற்கு 05 – 10 தொன்களானதுடன் எஞ்சிய குப்பைகளனைத்தும் (உக்கலடையும்/ உக்காதவையாக) நாதுருபிட்டிய தனியார் காணி ஒன்றில் கொட்டப்படுகின்றன.

எனினும், இதன் மூலம் சுற்றுச் சூழலில் உள்ள மக்களுக்கு பாரிய சிரமம் ஏற்படுவது அவதானிக்கப்பட்டதுடன் இது தொடர்பாக பொது சுகாதார பரிசோதகர்களால் அவ்வப்போது பரீட்சிக்கப்பட்டு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. இதன் படி,

- இப் பகுதியில் அதிக துர்நாற்றம் வீசுதல்
- நாய்கள், மாடுகள், பன்றிகள் ஆகிய மிருகங்கள் கூடுகின்றன.
- அத்துமீறி வெளியாட்களால் குப்பைகள் இடப்படுகின்றன.
- காற்றால் குப்பைகள் ஆங்காங்கே சிதறுண்டு காணப்படுகின்றன. (பொலித்தீன், கடதாசி போன்றவை)
- குப்பைகள் தீப்பிடிப்பதற்கான எச்சரிக்கை உள்ளது.

**2.10 செயலாற்றல்**

---

நான்காண்டு திட்டத்தின் படி 2012 ஆம் ஆண்டின் போது மதிப்பிடப்பட்ட தொகை ரூபா 280 இலட்சமான 7 செயற்திட்டங்கள் செயற்படுத்தப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன் 2013 செப்தெம்பர் வரையிலும் அச் செயற்திட்டம் ஆரம்பிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) உள்ளகக் கணக்காய்வு

(இ) பாதீடு

(ஈ) வருமான நிர்வாகம்

(உ) சொத்து முகாமைத்துவம்

(ஊ) வாகனப் பயன்பாடு

(எ) குப்பை அகற்றல்